. 4 பக்கங்கள் . விலை ரூ. 5





# தின தமிழ்

DHINA TAMIL

தினசரி காலை நாளிதழ்

RNI No : TNTAM/2023/85936

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 25.04.2026 • மலர் 04 • இதழ்: 115

• Edition : Nagercoil • 25.04.2026 • Vol : 04 • Issue : 115 • Page : 4 • Rs. 5/-





## ஹார்முஸ் ஜலசந்தி நெருக்கடி:

# ஏப்.30ல் தூதரக தலைவர்கள் மாநாட்டில் பிரதமர்

புதுடெல்லி, ஏப்.25

ஹார்முஸ் ஜலசந்தியில் அமெரிக்காவும் ஈரானும் ஆதிக்கம் செலுத்தி வரும் நிலையில், வரும் 30ம் தேதி டெல்லியில் நடைபெற உள்ள இந்திய தூதரகத் தலைவர்கள் மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி இது குறித்து விளக்க உரை நிகழ்த்த உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

கடந்த பிப்.28ம் தேதி அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து ஈரான் மீது தாக்குதல் நடத்தின. இதையடுத்து, இஸ்ரேலுக்கு எதிராகவும், வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க நிலைகளை குறிவைத்தும் ஈரான் தாக்குதல்நடத்தியது.மேலும், ஹார்முஸ் ஜலசந்தியை முடக்கியது.

இரு தரப்புக்கும் இடையே மோதல் முற்றிய நிலையில், பாகிஸ்தானின் தலையீடு காரணமாக கடந்த 8ம் தேதி இரு வாரங்களுக்கு போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து அமெரிக்காவும் ஈரானும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டன.

எனினும், அது பலனளிக்காத நிலையில், போர் நிறுத்தத்தை காலவரையின்றி நீட்டிப்பதாக கடந்த 22ம் தேதி அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் அறிவித்தார்.

மேலும், ஈரான்துறைமுகங்களையும் ஹார்முஸ் ஜலசந்தியையும் அமெரிக்க கடற்படை முடக்கியுள்ள நிலையில், அமெரிக்காவுடன் அந்த நாடு உடன்பாடு மேற்கொள்ளும் வரை முடக்கம் தொடரும் என்று அறிவித்தார்.

ஈரான் மற்றும் அமெரிக்காவின் நடவடிக்கைகளால் ஹார்முஸ் ஜலசந்தி வழியாக கப்பல்கள் வெளியேறுவதோ உள்ளே செல்வதோ முடியாத நிலை உள்ளது. இந்திய துறைமுகங்களுக்கு வர வேண்டிய 14 கப்பல்கள் தற்போது ஹார்முஸ் ஜலசந்திக்கு உள்ளேநிறுத்திவைக்கப்பட்டுள்ளன. இதனால், இந்தியாவின் எரிசக்தி பாதுகாப்பு பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஏப்ரல் 28 முதல் 30 வரை மூன்று நாட்களுக்கு இந்திய தூதரக தலைவர்கள் மாநாடு புதுடெல்லியில் நடைபெற உள்ளது.

இதில், பல்வேறு நாடுகளில் இந்திய தூதர்களாக செயல்பட்டு வருபவர்கள்கலந்து கொள்ள இருக்கிறார்கள்.



இந்தமாநாட்டின்முதல் நாள், வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி தலைமையில் நடைபெற உள்ளது. இதில், மேற்கு ஆசியாவில் நிலவும் நெருக்கடி மற்றும் ஹார்முஸ் ஜலசந்தியை அமெரிக்காவும் ஈரானும் முற்றுகையிட்டு உள்ளதால் ஏற்படும் கடுமையான பொருளாதார பின்விளைவுகள் ஆகியவை குறித்து விக்ரம் மிஸ்ரி விளக்கம் அளிக்க உள்ளார். இதைத் தொடர்ந்து இந்த விவகாரத்தில் இந்தியா உட்பட உலக நாடுகள் பலவற்றின் நிலைப்பாடுகள் குறித்தும் அவர் விளக்கம் அளிக்க உள்ளார்.

இரண்டாம் நாள் மாநாட்டில், வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் உரையாற்ற உள்ளார். மேற்காசிய போர், உக்ரைன் போர், வளர்ந்து வரும் சீன ஆதிக்கம், புதிய உலகளாவிய சமநிலை ஆகியவை குறித்து இந்திய தூதர்களுக்கு ஜெய்சங்கர் விழிப்புணர்வை ஏற்படுத்த உள்ளார்.

அவரைத் தொடர்ந்து இந்திய பாதுகாப்புப் படைகளின் தலைமைத் தளபதி ஜெனரல் அனில் சவுகான், மாநாட்டில் உரையாற்ற உள்ளார்.

அவர், இந்திய ராணுவத்தின் திறன் மற்றும் ராணுவ கட்டமைப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் சீர்திருத்தங்கள் குறித்து தூதரக தலைவர்களுக்கு விளக்கம் அளிக்க உள்ளார். இந்த மாநாட்டில் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவலும் உரை நிகழ்த்த உள்ளார்.

மாநாட்டின் மூன்றாம் நாளான ஏப். 30ம் தேதி பிரதமர் நரேந்திர மோடி உரை நிகழ்த்த உள்ளார்.

அப்போது, வெளியுறவுத் துறையில் இந்தியாவின் தொலைநோக்குத் திட்டம் குறித்தும், மேற்காசிய போர் மற்றும் ஹார்முஸ் ஜலசந்தி விவகாரம் குறித்தும் பிரதமர் மோடி உரையாற்றுவார் என தகவல் வெளியாகி உள்ளது. முக்கிய நாடுகளுக்கான தூதர் நியமனங்களுக்கு, தொழில்முறை

ராஜதந்திரிகளைத் தாண்டி மற்றவர்களையும் கருத்தில் கொள்ள மத்திய அரசு முடிவு செய்துள்ள நிலையில், இந்த மாநாடு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகிறது.

# “ஏளனம் பேசியோருக்கு செயல் மூலம் தவெகவினர் பதிலடி”: விஜய் பெருமிதம்

சென்னை, ஏப். 25

“அரசியல் மாயாஜாலக் கணக்குகள் சாதாரண வெகுஜன மக்களால் உடைத்து நொறுக்கப்பட்டுள்ளன. தேர்தல் திருவிழா என்றும், ஜனநாயகத் திருவிழா என்றும் சொல்லப்படுவதன் அர்த்தம் சுகப்பட்டதே நேற்றுதான்” என தவெக தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

மேலும், ‘இவர்களுக்கெல்லாம் என்ன அரசியல் தெரியும், எப்படித் தாக்குப் பிடிப்பார்கள்’ என்று ஏளனம் பேசியோருக்குச் செயல் மூலம் தவெகவினர் பதிலடி தந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், “அரசியல் என்பது ஏதோ அசகாய சூரர்களுக்கானது மட்டுமே. அதீத அனுபவசாலிகளுக்கானது மட்டுமே. பதவிகளை அனுபவிப்பவர்களுக்கானது மட்டுமே. இப்படி அரசியலை ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் மட்டுப்படுத்தியும் கட்டுப்படுத்தியும் வைத்தவர்களின் மாயாஜாலக் கணக்குகள், சாதாரண வெகுஜன மக்களால் உடைத்து நொறுக்கப்பட்டுள்ளன.



அரசியலைக் கண்டு கொள்ளவே மாட்டார்கள் என்று இதுவரை அனுமானிக்கப்பட்ட இளைஞர்களும் பெண்களும் அரசியல் பேசத் தொடங்கிய அதிசயமும் அவசியமும் நிகழத் தொடங்கிவிட்டது. இது எப்போது இருந்து தொடங்கியதென நடுநிலை மனம்கொண்டோர் அனைவரும் உணர்வர்.

இதுவரை பெருமளவிலான குறிப்பிட்ட சதவீத வாக்குகள், வாக்குச்சாவடி பக்கமே வராமல் இருந்தன. ஆனால், 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 23ம் தேதி நடைபெற்ற சட்டப் பேரவைத் தேர்தல் வாக்குப்பதிவு, தமிழகத் தேர்தல் அரசியல் வரலாற்றில் சிகரமான வரலாற்று நிகழ்வாகப் பதிவாகி உள்ளது. 85% வாக்குப்பதிவு என்பதெல்லாம் இதுவரை தமிழ்நாடு காணாத ஒன்று.

வாக்குச்சாவடிகள் எங்கும் கோவில்களில் காணப்படும் கூட்டம்போல, குடும்பம் குடும்பமாகக் குழந்தை குட்டிகளுடன் வந்து வாக்களித்ததைக் கண்டு வியக்காதோர் எவரும் இருக்கவே வாய்ப்பில்லை.

அது மட்டுமா? வெளி மாநிலங்களில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் வாக்களிப்பதற்காகவே பெரும்பொருள் செலவு செய்து வந்த ஜனநாயகர்களை இருகரம் கூப்பி வணங்காமல் இருக்க முடியுமா?

தேர்தல் திருவிழா என்றும், ஜனநாயகத் திருவிழா என்றும் சொல்லப்படுவதன் அர்த்தம் சுகப்பட்டதே நேற்றுதான். இந்த 2026 ஏப்ரல் 23 தான். எனினும் இது ஒரு தொடக்கம் மட்டுமே. தமிழகத் தேர்தல் அரசியலை அர்த்தப்படுத்திய தமிழ்நாட்டு மக்களாகிய, என் பாட்டி, அம்மா, அக்கா, தங்கைகள், என் தாத்தா, அப்பா, அண்ணன், தம்பிகள், என் குடும்ப உறவுகள் அனைவருக்கும் என் சிரம் தாழ்ந்த நன்றியறிதலைக் காணிக்கையாக்குகிறேன்.

குறிப்பாக, நம் குடும்பத்தினரை வழிநடத்திய என் குட்டி நண்பா நண்பீஸுக்கு என்னுடைய உங்கள் விஜய் மாமாவின் ஸ்பெஷல் வணக்கமும் நன்றியும். குறிப்பாக, நான் நன்றி செலுத்த வேண்டியது, நம் வாக்குச்சாவடி முகவர்களுக்கும், நம் கட்சித் தோழர்களுக்கும் அனைத்து நிலை நிர்வாகிகளுக்கும்தான்.

இவர்களுக்கெல்லாம் என்ன அரசியல் தெரியும்? எப்படித் தாக்குப் பிடிப்பார்கள் என்று ஏளனம் பேசியோருக்குச் செயல் மூலம் பதிலடி தந்த கட்சித் தோழர்களே...உங்களுக்கு என் மனம்நிறைந்த வாழ்த்துகளும் நன்றியும். கட்சித் தோழர்களுக்கு உறுதுணையாக இருந்த குடும்பத்தினருக்கும் நன்றி” என்று விஜய் தெரிவித்துள்ளார்.


தின தமிழ்

**நிருபர்கள் தேவை**

**வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக**

**தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை**

**தகுதிகள்**

குற்றவழக்குகள் இருக்கக் கூடாது. முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்

மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்

99944 66200 – 70102 64701


# நாதக வெற்றி பெற சோர்வின்றி உழைத்த அனைவருக்கும் மனமார்ந்த நன்றி

## கன்னியாகுமரி தொகுதி வேட்பாளர்



நாகர்கோவில், ஏப்25

நாம் தமிழர் கட்சி கன்னியாகுமரி சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் மரிய ஜெனிபர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

நாம்தமிழர்கட்சியின் கன்னியாகுமரி சட்டமன்ற தொகுதி வேட்பாளராக என்னை அறிவித்த நாளிலிருந்து வாக்குப்பதிவு நாள் வரை எனக்காக களத்தில் கடும் உழைப்பை தந்து இயங்கிய அனைத்து மாநில, மண்டல, கிளை பொறுப்பாளர்களுக்கும், கட்சி உறவுகளுக்கும் என் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். தன்னார்வலர்களாக முன்வந்து பரப்புரைகளுக்கு உதவிய மக்களுக்கும், களத்திலும், பின்னணியிலும் உழைத்த நண்பர்களுக்கும், பொருளாதார உதவிகளை செய்த நல்லுள்ளங்களுக்கும், நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

தன் கடுமையான உழைப்பால் நாம் சோர்வடையாமல் வலுவேற்றிய அண்ணன் செந்தமிழன் சீமான் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன் . உங்கள் அனைவரின் ஆதரவும் இனமுன்னோர்கள் மற்றும் மாவீரர்களின் அருளும் நம்மை வழி நடத்தியிருக்கிறது.

இந்த பரப்புரை பயணத்தில் கன்னியாகுமரி சட்டமன்ற தொகுதி முழுவதும் ஊர்கள் தோறும் தெருக்கள் தோறும் வீடுகள் தோறும் சென்றடைந்திருக்கிறோம். முடிந்தவரை நாம் தமிழர் கட்சியின் கொள்கைகளையும் தமிழ்தேசிய அரசியலின் தேவையையும் மக்களுக்கு கடத்தியிருக்கிறோம். நமது கூட்டு உழைப்பும் தமிழ்தேசிய அரசியலின்மீதான பற்றுறுதியுமே இதை சாத்தியப்படுத்தியிருக்கிறது.

சட்டமன்ற தேர்தலுக்கான நமது வேலைகள் மட்டுமே நிறைவடைந்திருக்கிறது. வழக்கம்போல் களப்பணிகள் நமக்காக காத்திருக்கிறது. தொடர்ந்து இயங்குவோம். இலக்கு ஒன்றுதான் இனத்தின் விடுதலை என அவர் கூறியிருந்தார்.




# “வருமான வரித் துறை சோதனை... இது தேர்தல் நேர வன்கொடுமை!” செல்வப்பெருந்தகை காட்டம்

சென்னை

“எத்தனை எதிர்க்கட்சி தலைவர்கள் வீட்டில் சோதனை நடத்தியுள்ளனர் என்பதற்கான வெள்ளை அறிக்கையை வருமான வரித் துறையினர் வெளியிட வேண்டும்” என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் அவர் இன்று செய்தியாளர்களிடம் அவர் கூறும்போது, “ஜனநாயகக் கடமையை ஆற்றிய தமிழ்நாட்டு வாக்காளர்களுக்கு நன்றி. மத்தியில் பாஜக அரசு கொண்டு வர முயன்றது பெண்களுக்கான இடஒதுக்கீடு மசோதா அல்ல. அது ஓர் ஏமாற்றும் மசோதா. உண்மையான மகளிர் இடஒதுக்கீடு மசோதாவை பஞ்சாயத்து ராஜ் மூலம் கொண்டு வந்தவர் மறைந்த முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்த்.

கடந்த வாரம் ராகுல் காந்தி பிரச்சாரத்துக்கு வந்தபோது, வெளிமாநில அதிகாரிகள் சிலர் எங்கள் இடங்களில் முற்றுகையிட்டனர். குறிப்பாக, எனது தேர்தல் பொறுப்பாளர் மனோகரன் என்பவரது இடத்தில் அதிகாரிகள் சோதனை நடத்தியுள்ளனர்.

நான் தேர்தல் பரப்புரைக்கு வெளியில் சென்ற நேரத்தில் அலுவலகம் சென்ற அதிகாரிகள் எங்கள்அலுவலகசிசிடிவியை சுவிட்ச் ஆஃப் செய்துள்ளனர். எதற்காக சிசிடிவியை ஆஃப் செய்ய சொன்னீர்கள்? ஒரு ஜனநாயக நாட்டில் வெளிப்படைத் தன்மையுடன் அதிகாரிகள் சோதனை நடத்த வேண்டும்.

மேலும், சோதனையில் பணம் கிடைக்கவில்லை என்றதும், பின்னர் சிசிடிவியை ஆன் செய்து பதிவுகளைக் கேட்டு ஆய்வு செய்துவிட்டு, அதிலும் ஒன்றும்கிடைக்கவில்லை என்றதும் சோதனைக்கு வந்த அதிகாரிகள் வெளியேறியுள்ளனர். அப்போது நடந்தவை காட்சிகளாக சிசிடிவியில் பதிவாகியுள்ளது.



ஆனால், எனக்கு சம்பந்தப்பட்ட இடங்களில் எங்கும் சோதனை நடத்தவில்லை என்று வருமான வரித் துறை அதிகாரிகள் கூறியுள்ளனர். நான் பிரச்சாரத்தில் இருந்த சமயம் எனது ஸ்ரீபெரும்புதூரில் தொகுதியில் ஏப்ரல் 19, 20 தேதிகளில் நடைபெற்ற சோதனையில் எனது அலுவலகத்தில் இருந்த என்ன பொருட்களை எடுத்து சென்றார்கள் என்பது எனக்கு தெரியவில்லை.

மேலும், எனது ஆதரவாளர்கள் இடங்களிலும் பல கட்ட சோதனை நடைபெற்றது. இருப்பினும் சோதனையில் எந்த பொருட்களும் கிடைக்கவில்லை. தேர்தல் நேரத்தில் இது போல் ஒரு நடவடிக்கை என்பது வன்கொடுமை. இது குறித்து கேள்வி எழுப்பினால், எங்கள் மீதே வருமான வரித் துறையினர் புகார் கொடுத்துள்ளனர்” என்றார்.

வருமான வரித் துறையினர் சோதனை நடத்தியதாக கூறி சிசிடிவி வீடியோ ஒன்றை வெளிட்டு தொடர்ந்து பேசிய செல்வப்பெருந்தகை, “இந்த ஆதாரத்தை நேற்றைய தினமே வெளியிட்டால், தேர்தல் ஸ்டன்ட் அடிப்பதாக விமர்சனம் செய்வார்கள். அதனால், வாக்குப் பதிவு நிறைவு பெற்ற பின்னர் இன்று சிசிடிவி பதிவு வெளியிடுகிறோம்.

அதிகாரிகள் மீது நாங்கள் குற்றச்சாட்டு வைக்க விரும்பவில்லை. ஏனென்றால், அவர்கள் ஆட்சியாளர்கள் மூலம் ஏவி விடப்படுகிறார்கள். உண்மையாக இருந்தால் பத்திரிகையில் வெளிப்படையாக கூறி இருக்கலாம். ஏன் கூறவில்லை?

நான் வெளிப்படையாக வேண்டுகோள் விடுக்கிறேன். வருமான வரித் துறையினர் எத்தனை மதச்சார்பற்ற கூட்டணி வேட்பாளர்கள் வீடுகளில் சோதனை நடைபெற்றது, எத்தனை அதிமுகதலைமையிலான கூட்டணி கட்சி வேட்பாளர்கள் வீட்டுகளில் சோதனை நடைபெற்றது என்பது குறித்து வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும். அதன் மூலமாகவே, தமிழக வேட்பாளர்கள்மீது டெல்லிதலைமை காழ்ப்புணர்ச்சியுடன் செயல்படுகிறது என்பது நாட்டு மக்களுக்கு தெரிய வரும்.

மல்லிகர்ஜுனா கார்கே, வருமான வரித் துறையை சோதனையை கண்டித்து ”ஜனநாயக நாட்டில் அதிகாரிகளை வைத்து மிரட்டுவதும் ஒருவிததீவிரவாதம் தான்” என்று கூறியதற்கு தேர்தல் ஆணையம் விளக்கம் கேட்டுள்ளது.

சோதனை என்ற பெயரில் மக்களை அதிகாரிகள் அச்சுறுத்துவது என்பது மிகவும் மோசமானது. மத்தியில் ஆட்சி மாற்றம் ஏற்படும்என்றுகூறுகின்றனர், கண்டிப்பாக 5 மாநிலத் தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு சந்திரபாபு நாயு, நிதிஷ் குமார் ஆகியோர் தயாராக இருக்கின்றனர். ஒரு நிமிடத்தில் மத்தியில் ஆட்சி அமைக்கப்படும்” என்று செல்வப்பெருந்தகை கூறினார்.

### ஈரோடு மாவட்டத்தில்

## மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களுக்கு துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு

ஈரோடு ஏப் 25

ஈரோடு மாவட்டத்தில் உள்ள ஈரோடு கிழக்கு ,ஈரோடுமேற்கு,மொடக்குறிச்சி பவானி, பெருந்துறை, அந்தியூர், கோபி, பவானி சாகர் ஆகிய 8 சட்ட சபை தொகுதிகளிலும் நேற்று அமைதியான முறையில் ஓட்டுப்பதிவு நடந்தது. ஒரு சில இடங்களில் ஓட்டு பதிவு முடியும் தருவாயில் ஓட்டு போட வந்த வாக்காளர்களுக்கு டோக்கன் கொடுக்கப்பட்டது. இதன் பிறகு அனைத்து இடங்களிலும் வாக்கு பதிவு முடிந்ததும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களுக்கு வேட்பாளர்களின் ஏஜெண்டுகள் முன்னிலையில் சீல் வைக்கப்பட்டது.இதையடுத்து வாக்கு பதிவு இயந்திரங்கள் வேன்களில் ஏற்றப் பட்டு பலத்த போலீஸ் பாதுகாப்புடன் ஓட்டு எண்ணும் இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டது.

ஈரோடு கிழக்கு, ஈரோடு மேற்கு, மொடக்குறிச்சி, பவானி, பெருந்துறை, அந்தியூர் ஆகிய 6 சட்ட சபை தொகுதிகளுக்கான வாக்கு பதிவு இயந்திரங்கள் சித்தோடு ஐ ஆர் டி டி கல்லூரிக்கு கொண்டு செல்லப்பட்டன. இந்த இயந்திரங்கள் தொகுதி வாரியாக ஒவ்வொரு அறையிலும் பாதுகாப்பாக வைக்கப்பட்டு அரசியல் கட்சிகளின் முன்னிலையில் சீல் வைக்க ப்பட்டது.

இந்த அறைகளுக்கு 24 நேரமும் துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. இவர்கள் இரவு பகலாக பாதுகாப்பு பணியில் ஈடுபடுவார்கள். இதேபோல கோபி, பவானி சாகர் ஆகிய 2 தொகுதிகளுக்கான வாக்குப்பதிவு இயந்திரங்கள் கோபி கலைக்கல்லூரியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டு உள்ளது. வருகிற 4 ந் தேதி ஓட்டுகள் எண்ணப்படுகிறது.



### வெள்ளையந்தோப்பு ஸ்ரீமன் நாராயண சுவாமி திருக்கோவில்

## சித்திரை திருவிழா திரு கொடியேற்றத்துடன் தொடங்கியது

தென்தாமரைகுளம்., ஏப். 25.

அகஸ்தீஸ்வரம் அருகே உள்ள வெள்ளையந்தோப்பு ஊர் ஸ்ரீமன் நாராயணசுவாமி திருக்கோவிலில் சித்திரை திருவிழா திருக்கொடி ஏற்றத்துடன் நேற்று தொடங்கியது. திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

வெள்ளையந்தோப்பு ஊர் ஸ்ரீமன் நாராயணசுவாமி திருக்கோவிலில் ஆண்டுதோறும் ஐப்பசி மாதத்தில் 18 நாட்களும்,சித்திரை மாதத்தில் 11 நாட்களும் திருவிழாக்கள் நடைபெறும்.

இந்த ஆண்டு சித்திரை திருவிழா நேற்று காலை திருக்கொடியேற்றத்துடன் தொடங்கியது. இதனையொட்டி நேற்று காலை 6 மணிக்கு அய்யாவுக்கு பால் நியமித்து சிறப்பு பணிவிடையும் 6:30 மணிக்கு அய்யாவின் அருளால் நிறுவப்பட்ட கொடி மரத்தில் திருக்கொடி ஏற்றுதல் நிகழ்ச்சியும் நடைபெற்றது. திருக்கொடியை திருக்கோவில் நிர்வாக குழு தலைவர் நிர்வாக குழு மற்றும் செயற்குழு தணிக்கை குழு உறுப்பினர்கள் முன்னிலையில் ஏற்றினார். இதனைத் தொடர்ந்து சிற்றுண்டி விருந்தும், நண்பகல் 12 மணிக்கு உச்சிப்படிப்பும் நடைபெற்றது .இரவு 7 மணிக்கு அய்யா தொட்டில் வாகனத்தில் எழுந்தருளி திருக்கோவிலை சுற்றி பவனிவரும்நிகழ்ச்சியும் நடைபெற்றது. திருவிழா தொடர்ந்து 11 நாட்கள் நடைபெறுகிறது. திருவிழாவின் 8 நாளான மே மாதம் ஒன்றாம் தேதி இரவு 7மணிக்கு அய்யா வெள்ளை குதிரை வாகனத்தில் எழுந்தருளி கலிவேட்டையாடும் நிகழ்ச்சியும் நடைபெறுகிறது. அதனைத் தொடர்ந்து சமபந்தி விருந்து நடைபெறுகிறது. 9 திருவிழாவான மே மாதம் 2ம் தேதி இரவு 7 மணிக்கு அய்யா அனுமார் வாகனத்தில் எழுந்தருளி ஊரின் நடுத்தெரு சுற்றி பவனி வரும் நிகழ்ச்சியும் அதனைத் தொடர்ந்து அன்னதானமும் நடைபெறுகிறது. 10 திருவிழாவான 3ம் தேதி ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு அய்யா இந்திர வாகனத்தில் எழுந்தருளி ஊரை சுற்றி பவனி வரும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. மே மாதம் 4ம் தேதி 11 ம் நாள் திருவிழா நடைபெறுகிறது. அன்று காலை 9 மணிக்கு நாதஸ்வர கச்சேரி நண்பகல் 12 மணிக்கு அய்யாவுக்கு சிறப்பு பள்ளி அலங்கார பணிவிடை 12.30 மணிக்கு சமபந்தி விருந்து மாலை 4 மணிக்கு அய்யா ஊர் சுற்றி பவனி வருதல் நிகழ்ச்சி நடைபெறுகிறது. இரவு 8 மணிக்கு திரைப்பட மெல்லிசை விருந்து நடைபெறுகிறது. இந்நிகழ்ச்சியை கன்னியாகுமரி பாராளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த், திமுக வர்த்தக அணி இணைச் செயலாளரும் தலைமை செயற்குழு உறுப்பினருமான வழக்கறிஞர் தாமரை பாரதி ஆகியோர் தூக்கி வைக்கின்றனர். இரவு 12 மணிக்கு அய்யாவுக்கு பணிவிடையும் அதனைத்தொடர்ந்து அய்யா காளை வாகனத்தில் திருக்கோவிலை சுற்றி பவனிவரும்நிகழ்ச்சியும் நள்ளிரவு 1 மணிக்கு திருக்கொடி அமர்த்துதல் நிகழ்ச்சியும் நடைபெறுகிறது. திருவிழாவிற்கான ஏற்பாடுகளை ஊர் தலைவர் முனைவர் ரெத்தின சிகாமணி, ஒருங்கிணைப்பாளர் ராமச்சந்திரன், துணைத்தலைவர்கள் சுதன்மணி ,தங்கத்துரை ,செயலாளர் முருகேசன், இணைச்செயலாளர் பால்துரை, பொருளாளர் பொன்னுலிங்கம், மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் தணிக்கையாளர்கள் ஊர் பொதுமக்கள் ஆகியோர் செய்து வருகின்றனர்.



2026 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, கிருஷ்ணகிரி மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சியருமான ச.தினேஷ்குமார் பையனப்பள்ளி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் தனது மனைவியுடன் வந்து வாக்கை பதிவு செய்தார். பொதுமக்கள் அனைவரும் பெருமளவில் வந்து வாக்களித்து தங்கள் ஜனநாயகக் கடமையை நிறைவேற்ற வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

## தருமபுரி மாவட்டத்தில் வாக்குப்பதிவு நிலவரம்



தருமபுரி, ஏப். 25

தருமபுரி மாவட்டத்தில் சட்டமன்ற தொகுதி வாரியாக பதிவான ஓட்டுகள் சதவிகிதம் வருமாறு.

பாலக்கோடு சட்டமன்ற தொகுதி 92.57 சதவீதம். பென்னாகரம் சட்டமன்ற தொகுதி 90.71சதவீதம். தருமபுரி சட்டமன்ற தொகுதி 89.44 சதவீதம். பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற தொகுதி 90.36 சதவீதம். அரூர் (தனி) சட்டமன்றத் தொகுதி 87.72 சதவீதம். தர்மபுரி மாவட்டத்தில் ஐந்து சட்டமன்ற தொகுதிகளில் 90. 14 சதவீதம் வாக்குகள் பதிவாகியுள்ளது என்று மாவட்ட தேர்தல்அலுவலர்/மாவட்ட ஆட்சியர்சதீஷ்தெரிவித்தார்.

### அஞ்செட்டி ஓட்டுப்பதிவு மையத்தில்

## தாக்கப்பட்ட தம்பதி பாதுகாப்புடன் ஓட்டளிக்க கலெக்டர் ஏற்பாடு



அஞ்செட்டி ,ஏப். 25

அஞ்செட்டி அருகே, ஓட்டளிக்க சென்ற காதல் தம்பதி மீது தாக்குதல் நடத்தப்பட்ட நிலையில், கலெக்டர் உத்தரவின்படி, பாதுகாப்பாக ஓட்டளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. கிருஷ்ணகிரி மாவட்டம், அஞ்செட்டி அருகே சித்தாண்டபுரம் கிராமத்தை சேர்ந்தவர் மன்னார், 26. இவரும், அதே பகுதியை சேர்ந்த கிருத்திகா, 22, என்பவரும், 3 ஆண்டாக காதலித்து, கடந்தாண்டு ஏப்ரல் மாதம் குடும்பத்தை எதிர்த்து திருமணம் செய்து கொண்டனர். ஊருக்கு சென்றால், உறவினர்களால் பாதிப்பு வரும் என்பதால், ஓசூரில் வசிக்கின்றனர்.தமிழக சட்டசபை தேர்தல் ஓட்டுப்பதிவு நேற்று நடந்த நிலையில், தளி தொகுதிக்கு உட்பட்ட சொந்த கிராமமான சித்தாண்டபுரத்தில் ஓட்டுப்பதிவு செய்ய, மன்னார் மற்றும் கிருத்திகா ஆகியோர் திருமணத்திற்கு பின், முதல் முறையாக நேற்று காலை ஊருக்கு சென்றனர். அப்போது, கிருத்திகாவின் தாய்மாமன்கள், இருவரையும், ஏன் இங்கு வந்தீர்கள் என கேட்டு, ஓட்டளிக்க விடாமல் இருவரையும் தாக்கினர். தேன்கனிக்கோட்டை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட மன்னாருக்கு, சிறிது நேரத்திற்கு பின்பு தான், மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டது. காதல் தம்பதியை ஓட்டளிக்க விடாமல் தாக்கி விரட்டிய சம்பவம், மாவட்ட நிர்வாகம் வரை சென்றது. இதையடுத்து, மாவட்ட கலெக்டர் தினேஷ்குமார், உரிய போலீஸ் பாதுகாப்புடன், மன்னார் மற்றும் கிருத்திகா ஓட்டளிக்க ஏற்பாடு செய்தார். தனியாக வாகனத்தில் அழைத்து செல்லப்பட்டு, சித்தாண்டபுரம் கிராமத்தில் இருவரும் ஓட்டளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஓட்டளித்த பின் இருவரும், ஓசூர் புறப்பட்டுச் சென்றனர்.

### தக்கலையில்

## தேர்தலுக்கு இடையூறு செய்ததாக முன்னாள் எம்எல்ஏ மீது வழக்கு பதிவு

நாகர்கோவில், ஏப். 25

பத்மநாபபுரம் தொகுதிக்கு உட்பட்ட தக்கலை அரசு நடுநிலைப்பள்ளியில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச்சாவடி எண் 253ல் நேற்று முன்தினம் காலை முன்னாள் சுயேட்சை எம் எல் ஏ பாலச்சந்தர் (73) என்பவர் வாக்களிக்க வந்தார். அப்போது அவர், தான் ஒரு குறிப்பிட்ட சின்னத்திற்கு வாக்களித்த நிலையில் அதற்கு மாறாக வேறொரு சின்னத்தில் விளக்கு எரிந்ததாக புகார் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து அந்த வாக்குச்சாவடியில் வாக்குப்பதிவு உடனடியாக நிறுத்தப்பட்டது.

தொடர்ந்து இது குறித்து தகவல் அறிந்த உடன் மாவட்ட தேர்தல் அதிகாரியும், ஆட்சியருமான அழகுமீனா சம்பவ இடத்திற்கு நேரில் வந்து ஆய்வு நடத்தினார். தேர்தல் அதிகாரிகள் முன்னிலையில் மின்னணு வாக்குப்பதி இயந்திரம் விரிவான பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. டெஸ்ட் ஓட்டு பதிவு செய்யப்பட்டது. ஆய்வின் முடிவில் முன்னாள் எம்எல்ஏ பாலச்சந்தர் தெரிவித்தது தவறான தகவல் என்பதும், இயந்திரத்தில் எவ்வித கோளாறும் இல்லை என்பதும் உறுதி செய்யப்பட்டது.

தவறான புகாரை அளித்து வாக்குப்பதிவுக்கு இடையூறு ஏற்படுத்திய அவரை போலீசார் தக்கலை காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றனர். இந்த சம்பவத்தால் வாக்குச்சாவடியில் ஒரு மணி நேரம் வாக்குப்பதிவு தாமதம் ஏற்பட்டது. இந்த நிலையில் சம்பவம் தொடர்பாக அந்த வாக்குச்சாவடி தேர்தல் அலுவலராக இருந்த ஜெயசுதா (55) என்பவர் தக்கலை போலீசில் அளித்தார். புகாரில் முன்னாள் எம்எல்ஏ பாலச்சந்தர் வாக்குச்சாவடியில் ஒழுக்கத்தை சீர்குலைக்கும் எண்ணத்துடனும், கலகம் ஏற்படுத்தும் வகையிலும், பொது அமைதிக்கு குழப்பம் ஏற்படுத்தும் விதமாக தேர்தலுக்கு இடையூறு செய்ததாக கூறியுள்ளார். இந்த புகாரின் பேரில் தக்கலை போலீசார் பாலச்சந்தர் மீது வழக்கு பதிவு செய்துள்ளனர்.

### நாகர்கோவில் கோணம் அரசு பொறியியல் கல்லூரியில்

## வாக்குப்பதிவு இயந்திரங்கள் சீல் வைப்பு: 3 அடுக்கு போலீஸ் பாதுகாப்பு



நாகர்கோவில், ஏப். 25

குமரி மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்ற தொகுதிகளிலும் நேற்று முன் தினம் வாக்குப்பதிவு நடைபெற்றது. மொத்தம் 1914 வாக்கு சாவடிகளில் வாக்குப்பதிவுகள் நடைபெற்றன. இந்த வாக்கு சாவடிகளில் பதிவு செய்யப்பட்ட வாக்குப்பதிவு இயந்திரங்கள் அனைத்தும் துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்புடன்வாக்குஎண்ணிக்கை மையமான நாகர்கோவில் கோணத்தில் உள்ள அரசு பொறியியல்கல்லூரிக்கு நேற்று காலை கொண்டுவரப்பட்டன.

விடிய விடிய வாக்கு பெட்டிகள் வந்த வண்ணம்இருந்தன. கோணம் கல்லூரியில் சட்டமன்ற தொகுதிகள் வாரியாக தனித்தனியாக அறைகளில் வாக்கு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ளன. மேலும் இந்த வாக்கு பெட்டிகளை கொண்டு வர மொத்த 150 டெம்போக்கள் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தன. மண்டலவாரியாக பிரிக்கப்பட்டு வாக்குபதிவு இயந்திரங்களைக்கொண்டுவந்தனர். அந்தந்த சட்டமன்ற தொகுதிகளுக்கான அறைகளில் வாக்குச்சாவடி எண் வாரியாக பெட்டிகள் வைக்கப்பட்டன.

மலையோரம் கிராமங்களில் உள்ள வாக்குப்பதிவு இயந்திரங்கள் வந்து சேர்வதில்தாமதமானது. குறிப்பாக விளவங்கோடு, கிள்ளியூர் தொகுதிகளில் இருந்து நேற்று காலை வரை வாக்குப்பதி இயந்திரங்கள் வந்து கொண்டு இருந்தன. அந்தந்த அறைகளில் வாக்குப்பதிவு இயந்திரங்கள்வைக்கப்பட்ட பின் நேற்று காலையில் கலெக்டர், எஸ்பி மற்றும் தேர்தல் பார்வையாளர்கள் மேற்பார்வையில் வேட்பாளர்கள் முகவர்கள் முன்னிலையில் சீல் வைக்கப்பட்டன.

தொடர்ந்து வாக்கு எண்ணிக்கை மையத்தில் ஒரு ஏடிஎஸ்பி, 2 டிஎஸ்பிக்கள், 6 இன்ஸ்பெக்டர்கள் மற்றும் மத்திய ரயில்வே படை உட்பட 100 போலீசார் 24 மணி நேரமும் கண்காணிப்பு பணியில் இருக்கும் வகையில் 3 அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் வாக்கு எண்ணிக்கை மையத்தை சுற்றி தற்காலிக பாதுகாப்பு டவர்களும் அமைக்கப்பட்டுள்ளன.

## சீற்றம் அதிகம் கடலில் இறங்க வேண்டாம்

### எச்சரித்த காவலரை கடுமையாக தாக்கிய சுற்றுலா பயணி



நாகர்கோவில் ஏப் 25

கன்னியாகுமரி கடற்பகுதியில் அலைகளின் சீற்றம் அதிகமாக இருந்ததால், பாதுகாப்புப் பணியில் இருந்த காவலர் ஒருவர், கடலில் இறங்க முயன்ற இளைஞர்களைத் தடுத்து எச்சரித்துள்ளார். இதில் ஆத்திரமடைந்த அந்தச் சுற்றுலாப் பயணிகள், காவலருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதுடன், ஒரு கட்டத்தில் அந்த இடத்திலேயே அவரைச் சூழ்ந்துகொண்டு கடுமையாகத் தாக்கியுள்ளனர். இதைப் பார்த்த மற்ற சுற்றுலாப் பயணிகள் அதிர்ச்சியில் உறைந்தனர்.தகவலறிந்து வந்த போலீசார், தாக்குதலில் ஈடுபட்ட நபர்களைப் பிடித்து விசாரணை நடத்தி வருகின்றனர். பாதுகாப்புக்காகச் சொல்லப்படும் அறிவுரைகளைக் கூட மதிக்காமல், சட்டத்தைக் கையில் எடுத்த இந்தச் சுற்றுலா குடும்பத்தின் செயல் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## தேர்தல் முடிந்து வெளியூர் திரும்ப பேருந்து நிலையத்தில் காத்திருந்த பொதுமக்கள்



நாகர்கோவில்,ஏப்25

2026 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் 23ஆம் தேதி சிறப்பாக நடைபெற்று முடிந்தது. நடைபெற்ற தேர்தலை முன்னிட்டு தேர்தலில் வாக்களிப்பதற்காக வெளியூர்களில் குடும்பமாகவும், தனியாகவும் தங்கி இருந்து பணிபுரிந்து வருபவர்கள் தங்கள் சொந்த ஊருக்கு தேர்தல் நடைபெறும் நாளுக்கு முந்தைய நாள் வருகை புரிந்து சட்டமன்ற தேர்தலில் தங்களுடைய ஜனநாயக கடமையாற்றினர். வெளியூர்களிலிருந்து சொந்த ஊர்களுக்கு செல்லவும், 100% வாக்குப்பதிவு நடைபெறவும் தேர்தல் ஆணையத்தின் மூலம் தேர்தல் நாள் அன்று பொது விடுமுறை வழங்கப்பட்டது மட்டுமல்லாமல், பேருந்து சேவைகளும் தங்கு தடை இன்றி கிடைத்திட மாநில அரசு நடவடிக்கை எடுக்கவும் கூறி இருந்தது.

எனவே மாநில அரசு தேர்தலுக்கு முந்தைய நாள் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட சிறப்பு பேருந்துகள் இயக்க நடவடிக்கை எடுத்து இருந்தது.

இதனால் வெளியூரில் தங்கி பணிபுரிந்து வரும் ஏராளமானோர் தங்கள் சொந்த ஊருக்கு வந்து வாக்களிக்க முடிந்தது.

இந்நிலையில் வாக்குப்பதிவு முடிந்து மீண்டும் தங்கள் பணி புரியும் இடங்களுக்கு செல்ல நேற்று மாலை முதல் பேருந்து நிலையங்கள் மற்றும் ரயில் நிலையங்கள் வந்து குவிய தொடங்கினர். இதனால் வழக்கத்தை விட அதிகமான கூட்டம் தென்பட்டது.

முன்பதிவு செய்தவர்கள் ஒருபக்கம் என்றால் தங்கள் பயணத்தை முன்கூட்டியே திட்டமிட முடியாத ஏராளமான பயணிகளும் இவர்களுடன் சேர்ந்தனர். டிக்கெட் மற்றும் முன்பதிவில்லா டிக்கெட் எடுத்து பயணிப்பவர்கள் என வழக்கத்தைவிட ஏராளமானோர் ஒரே நேரத்தில் பயணிப்பதால் நாகர்கோவில் வடசேரி பேருந்து நிலையத்தில் பயணிகள் கூட்டம் அதிகமாக காணப்பட்டது.

இது குறித்து பயணி ஒருவர் கூறும்போது அரசு இன்னும் அதிகமான பேருந்துகளை இன்று இயக்கி இருக்கலாம் அவ்வாறு செய்யும்போதுகுறிப்பிட்ட நேரத்தில் எங்களால் நாங்கள் பணி புரியும் மாவட்டங்களுக்கு செல்ல முடியும். தற்போது கூட்டம் அதிகமாக உள்ளது பேருந்துகளோ குறைவாக காணப்படுகிறது. எங்களுக்கு பேருந்து கிடைக்குமா கிடைக்காதா என்ற சந்தேகத்தில் உள்ளோம் என அவர் தெரிவித்தார்.

# சுசீந்திரம் தாணுமாலைய சுவாமி கோவிலில் நாளை தெப்பத் திருவிழா தேரோட்டம்



சுசீந்திரம்.ஏப்.25

பிரசித்தி பெற்ற பழமையான திருக்கோவில்களில் சுசீந்திரம் தாணுமாலைய சுவாமி கோவில் ஒன்றாகும் இந்த கோவிலில் வருடம் தோறும் சித்திரை மாத தெப்பத் திருவிழா கொடியேற்றுத்துடன் துவங்கி பத்து நாட்கள் வெகு விமர்சியாக நடைபெறுவது வழக்கம் அது போல இந்த ஆண்டு தெப்பத் திருவிழாவிற்காக கடந்த 18ஆம் தேதி காலை 11 மணி அளவில் கொடியேற்றத்துடன் திருவிழா துவங்கியது காலை மாலை வேளைகளில் அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் சுவாமி அம்பாள் பெருமாள் வாகனப் பவனி நடைபெற்றது ஆறாம் திருவிழாவான 23ஆம் தேதி காலை 9 மணிக்கு சுவாமி அம்பாள் பூங்கோயில் வாகனத்தில் திருவீதி உலா வரும் நிகழ்ச்சி நடைபெற்றது மாலை 5:30 மணிக்கு சுவாமி மண்டகப்படிக்கு எழுந்தருளல் நிகழ்ச்சியும் இரவு 9:30 மணிக்கு இந்திர வாகனத்தில் சுவாமி எழுந்தருளல் நிகழ்ச்சியும் நடைபெற்றது ஏழாம் திருவிழாவான நேற்று காலை 5 மணி அளவில் பல்லக்கு வாகனத்தில் சுவாமி அம்பாள் திருவீதி உலா வரும் நிகழ்ச்சி மாலை 5:30 மணிக்கு ஊஞ்சல் மண்டபத்தில் மண்டகப்படிக்குசுவாமி எழுந்தருளல் நிகழ்ச்சியும்

இரவு ஒன்பது முப்பது மணி அளவில் கைலாச பர்வத வாகனத்தில் சுவாமி அம்பாள் எழுந்தருளல் நிகழ்ச்சியும் நடைபெறுகிறது எட்டாம் திருவிழாஅன்றுகாலை 5 மணிக்கு சிதம்பரேஸ்வரர் திருவீதி உலாவரும் நிகழ்ச்சியும் காலை 10 மணிக்கு அலங்கார மண்டபத்தில் நடராஜமூர்த்திக்கும் சிவகாமி அம்பாளுக்கும் அஷ்டபிஷேகம் நடைபெறுகிறது மாலை ஐந்து முப்பது மணிக்கு அலங்கார மண்டபத்தில் வைத்து நடராஜ பெருமானுக்கும் சிவகாமி அம்பாளுக்கும் அஸ்ட்டாபிஷேகம் நடைபெறுகிறது இரவு 7:30 மணியளவில் சிதம்பரேஸ்வரர் திருவீதி உலா வரும் நிகழ்ச்சியும் 9.30 மணி அளவில் பறங்கி நாற்காலி வாகனத்தில் சுவாமி அம்பாள் திருவீதி உலா வரும் நிகழ்ச்சியும் நடைபெறுகிறது ஒன்பதாம் திருவிழாவான 26 ஆம் தேதி காலை 6 மணிக்கு இந்திர வாகனத்தில் மகா விஷ்ணு அம்பாள் திருவீதிஉலா வரும் நிகழ்ச்சியும் காலை 8:30 மணியளவில் விநாயகர் தேரில் விநாயகரும் சப்பர தேரில் சுவாமியும் அம்மன் தேரில் அம்மனும் அலங்கரிக்கப்பட்ட தேரில் வைத்து கோவிலை ஒரு முறை வலம் வரும் தேரோட்ட நிகழ்ச்சி நடைபெறுகிறது பத்தாம் திருவிழாவான 27ஆம் தேதி இரவு 8 மணி அளவில் சுவாமி அம்பாள் பெருமாள் ஆகியோரை மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட தெப்பத்தில் வைத்து தெப்பக்குளத்தை சுற்றி மூன்று முறை வலம் வரும் தெப்பத் திருவிழா நடைபெறுகிறது

இரவு 12 மணியளவில் சுவாமிக்கு திரு ஆராட்டு நடைபெறுகிறது விழா ஏற்பாடுகளை கோவில்களின் இணை ஆணையர்ஜான்சிராணிகோவில் மேலாளர் ஆறுமுகதரன் கணக்கர்கண்ணன்தாணுமாலைய சுவாமி கோவில் பக்தர்கள் பொதுமக்கள்இணைந்து செய்து வருகின்றனர்

## பேக்கர் ஹியூஸ் நிறுவனத்திற்காக

# லீன் உற்பத்தி ஆலையை ஆசாத் இன்ஜினியரிங் திறப்பு விழா




சென்னை, ஏப்ரல் 25

துல்லியப் பொறியியலில் முன்னணியில் இருக்கும் ஆசாத் இன்ஜினியரிங், ஹைதராபாத், துனிகிபொல்லாரத்தில் துவக்குகிறது. இந்த ஆலை, உலகளாவிய எரிசக்தி தொழில்நுட்ப நிறுவனமான பேக்கர் ஹியூஸ் நிறுவனத்திற்கு ஆதரவளிப்பதற்கான வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் கட்டப்பட்டுள்ளது

இந்த நிகழ்வை குறிக்கும் வகையில், ஆசாத் இன்ஜினியரிங் நிறுவனத்தின் தலைவர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரி ராகேஷ் சோப்தார் கூறியதாவது: “பேக்கர்ஹியூஸ் உடனான எங்களின் எட்டு ஆண்டு காலப் பயணத்தில், இந்த பிரத்யேகமான லீன் உற்பத்தி ஆலையின் தொடக்க விழா ஒரு முக்கிய மைல் கல்லாகும்.

நாங்கள் இதுவரை மேற்கொண்டதிலேயே மிகவும் கடுமையான தகுதி நிர்ணயப் பாதைகளில் ஒன்றின் மூலம் 2018ல் இந்த பங்களிப்பு தொடங்கியது. எரிவாயு மற்றும் நீராவி விசையாழிகளின் இறுதி நிலைகளுக்கான முக்கியமான சுழலும் ஏர்ஃபாயில்களை வழங்குவதில் பேக்கர் ஹியூஸ் உடனான எங்கள் பயணம் தொடங்கியது. அது பின்னர், தொழில்துறை மற்றும் எரிசக்தி தொழில்நுட்ப வணிகத்திற்கான ஒரு ஆழமான, மூலோபாயப் பங்களிப்பாக வளர்ந்துள்ளது. ஹைதராபாத்தில் உள்ள துனிகி பொல்லாரத்தில்அமைந்துள்ள எங்களின் சிறப்பு மையத்தில் உள்ள இந்த 7,600 சதுர மீட்டர் ஆலை, பேக்கர் ஹியூஸுக்காக பிரத்தியேகமாக, நிறுவனத்திற்குள்ளேயேசிறப்புச்செயல்முறைத் திறன்களுடன் கூடிய ஒரு பிரத்யேகமான, உலகத்தரம் வாய்ந்த உற்பத்தி ஆலையை உருவாக்கும் எங்களின் திட்டமிட்ட உத்தியின் ஒரு பகுதியாகும். சுமார் 230 திறமையான தொழில் வல்லுநர்களுடன், அதிக அளவில் சிக்கலான பாகங்களை மைக்ரான்களில் அளவிடப்படும் தன்மையுடன் வழங்கக்கூடிய ஒரு உயர் துல்லியமான சூழலமைப்பை நாங்கள் உருவாக்குகிறோம். இந்த ஆலை, இந்தியாவின் உற்பத்தி எதிர்காலத்தின் மீதான நம்பிக்கையின் வெளிப்பாடாகவும், அதில் முன்னணியில் இருப்பதற்கான ஆசாத்தின் அர்ப்பணிப்பாகவும் விளங்குகிறது.” என்றார்.

## கே. ஈச்சம்பாடியில்

# அரசு பள்ளியை இடமாற்றம் செய்யக்கூடாது என வலியுறுத்தி தேர்தலை புறக்கணித்த கிராம மக்கள்

தருமபுரி ஏப்ரல் 25

தருமபுரி மாவட்டம் அரூர் சட்ட மன்ற தொகுதிக்குட்பட்ட கே. ஈச்சம்பாடி கிராமத்தில் 1991 ம் ஆண்டு தொடங்கப்பட்ட அரசு நடுநிலைப் பள்ளி 1997 ம் ஆண்டு உயர்நிலைப் பள்ளியாக தர உயர்த்தப்பட்டு செயல்பட்டு வந்தது . கே. ஈச்சம்பாடி கிராமத்தில் பள்ளி வகுப்பறை கட்டிடங்கள் கட்டுவதற்கு போதிய இட வசதி இல்லை என்பதால் கே. ஈச்சம்பாடி காலனி பகுதியில் உயர்நிலைப் பள்ளிக்கு கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகிறது. தற்போது நடுநிலைப் பள்ளியாக அது செயல்பட்டு வருகிறது. இந்த நிலையில் கே. ஈச்சம்பாடி கிராம மக்கள் ஒரு கூரை, சிமெண்ட் அட்டைகளால் அமைக்கப்பட்ட இரண்டு வகுப்பறைகள், சமையலறை, கழிவறை ஆகிய வசதிகளுடன் சொந்த செலவில் கட்டினத்தை கட்டி அந்தப் பகுதிக்கு அரசு உயர் நிலைப்பள்ளி செயல்பட அனுமதி கோரினார்கள். இந்த நிலையில் கே. ஈச்சம்பாடி காலனி பகுதியில் செயல்பட்டு வரும் உயர் நிலைப்பள்ளி வளாகத்தில் சுமார் ரூ. 2 கோடி மதிப்பில் புதிய வகுப்பறை கட்டிட கட்டுமான பணிகள் நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் கே. ஈச்சம்பாடி கிராமத்திலேயே தொடர்ந்து அரசு உயர்நிலைப் பள்ளி செயல்பட வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி தேர்தல் புறக்கணிப்பில் ஈடுபடுவதாக அறிவித்தனர். அதன்படி காலையில் கே. ஈச்சம்பாடி கிராமத்தில் உள்ள வாக்குச்சாவடியில் தேர்தல் வாக்குப்பதிவு தொடங்கிய நிலையில் அந்த கிராமத்தைச் சேர்ந்த யாரும் வாக்களிக்கவில்லை. இதனால் வாக்குச்சாவடி வெறிச்சோடி காணப்பட்டது. தகவல் அறிந்த மாவட்ட வருவாய் அலுவலர்கவிதா மற்றும் அதிகாரிகள் அங்கு சென்று பேச்சுவார்த்தை நடத்தினார்கள் ஆனால் அதில் உடன்பாடு ஏற்படவில்லை. இந்த நிலையில் அந்த கிராமத்தைச் சுற்றியுள்ள சில பகுதிகளை சேர்ந்த வாக்காளர்கள் வாக்களித்தனர். இந்த வாக்குச்சாவடியில் 900 க்கும் மேற்பட்ட வாக்குகள் உள்ள நிலையில் 43 வாக்குகள் மட்டுமே பதிவானது. தருமபுரி மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு மகேஸ்வரன்தலைமையில் போலீசார் அந்த பகுதியில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். வாக்குப்பதிவு நேரம் முடிவடைந்த உடன் இரவு இந்த வாக்குச்சாவடியில் இருந்து மின்னணு வாக்கப்பதிவு இயந்திரங்களை வைக்கப்பட்ட வாகனம் போலீஸ் பாதுகாப்புடன் புறப்பட்டது. அப்போது அந்த வாகனத்தை தடுத்து நிறுத்தி கிராம மக்கள் திடீர் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அந்த பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

## நாகர்கோவிலில்

# வீட்டு சுவரில் பதுக்கிய ரூ38 ஆயிரம் பணம்: பறக்கும் படை கைப்பற்றியது

நாகர்கோவில், ஏப் 25

குமரி மாவட்டத்தில் சட்டமன்றத் தேர்தலை ஒட்டி பண விநியோகத்தை தடுக்க பறக்கும் படை அமைக்கப்பட்டு சோதனை நடந்தது. குமரி மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்ற தொகுதிகளிலும் 8 மணி நேர சுழற்சி அடிப்படையில் 21 பறக்கும் படைகளும், 24 நிலையான கண்காணிப்பு படைகளும் மாவட்டம் முழுவதும் தீவிர சோதனையில் ஈடுபட்டு வந்திருந்தனர்.

இந்த வகையில் நேற்று முன்தினம் காலை வரை 1 கோடியே 25 லட்சத்தி 1060 ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. தேர்தல் நாளான நேற்று முன்தினமும் சோதனை தீவிரமாக நடந்து வந்தது. வெளி மாவட்டங்களில் இருந்து வந்த வாகனங்களை அதிகாரிகள் சோதனை செய்தனர்.

இந்த நிலையில் நாகர்கோவில் சட்டமன்றத் தொகுதி பறக்கும் படை அலுவலர் சுஷ்மா தலைமையில் ஆசாரி பள்ளம், கீழப் பெருவிளை பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது ஒரு வீட்டின் சுவரில் துணிப்பையில் சுற்றிய பணம் இருந்தது கண்டு பிடித்தனர். அதை பறக்கும் படையினர் கைப்பற்றினர். அந்த பையை சோதனை செய்தபோது அதில் மொத்தம் ரூ 38,000 இருந்தது கண்டு பிடிக்கப்பட்டது. இது குறித்து அந்த வீட்டில் இருந்தவர்களிடம் கேட்டபோது தங்களுக்கு இது குறித்து தெரியாது என கூறினர். இதை அடுத்து அந்த பணத்தை பறக்கும் படையினர் கைப்பற்றி கொண்டு சென்றனர். இந்த பணம் அந்த வீட்டு சுவரில் வைத்தது யார்? அரசியல் கட்சியின் பணமா? என்பது குறித்து ஆசாரிப்பள்ளம் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## திருச்சி லாட்ஜில்

# இன்ஜினியர் மர்மமான முறையில் சாவு

கரூர், ஏப். 25

கரூர் மாவட்டம் புலியூரைச் சேர்ந்த டிப்ளமோ கெமிக்கல் இன்ஜினியர் மகதீஸ்வரன், லால்குடி அருகே உள்ள டால்மியா சிமெண்ட் ஆலையில் ஆய்வு செய்வதற்காக திருச்சி வந்துள்ளார். காவிரி பாலம் அருகே உள்ள லாட்ஜில் அறை எடுத்து தங்கியிருந்த அவர், நீண்ட நேரம்வெளியே வராததால் லாட்ஜ் ஊழியர்கள் சென்று பார்த்தபோது மயங்கிய நிலையில் உயிரிழந்த நிலையில் கிடந்தார். தகவல் அறிந்த போலீசார் அவரது உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்து, தற்கொலை செய்து கொண்டாரா அல்லது வேறு ஏதேனும் காரணமா என்பது குறித்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, தேனி மாவட்டம் 198. ஆண்டிபட்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் நடைபெற்ற வாக்குப்பதிவில் பயன்படுத்தப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், வாக்கு எண்ணும் மையமான தேனி கம்மவார் சங்கம் கல்லூரியில் இன்று (24.04.2026) வேட்பாளர்கள் மற்றும் அவர்களின் முகவர்கள் முன்னிலையில் பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டு, மூடி முத்திரையிடும் பணிகள் நடைபெற்றன. மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பொதுப்பார்வையாளர்கள் பீம் சிங் மற்றும் வினய் பிரதாப் சிங் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

## குளச்சல் தொகுதியில்

# கள்ள ஓட்டு போட்ட தொழிலாளி கைது

குளச்சல், ஏப். 25

குளச்சல் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மாடதட்டுவிளை புனித அலோசியஸ் பள்ளியில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச்சாவடி எண் 288ல் நேற்று முன்தினம் வில்லுக்குறி பகுதி நுள்ளி விளை என்ற இடத்தை சேர்ந்த சுபாகர் (40) என்பவர் வாக்களித்தார். அப்போது அவர் ஆள்மாறாட்டம் செய்து கள்ள ஓட்டு போட்டு இருப்பதாக அங்கிருந்த பூத் ஏஜன்ட் புகார் கூறினார். இதை அடுத்து சுபாகரிடம் தேர்தல் அலுவலர் விசாரணை நடத்தினார்.

இதில் அதே ஊரைச் சேர்ந்த ஆல்வின் ராஜா என்பவரின் வாக்கை ஆள்மாறாட்டம் செய்து வாக்குப்பதிவு செய்தது தெரியவந்தது. இதை அடுத்து தேர்தல் அலுவலர் கவிதா இரணியல் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். புகாரின் பேரில் போலீசார் விசாரணை நடத்தி வழக்கு பதிவு செய்து சுபா கரை கைது செய்தனர். பின்னர் அவர் ஜாமீனில் விடுவி க்கப்பட்டார்.

## புதுக்கடை அருகே

# வாக்காளர்களுக்கு இடையூறு செய்த 2 பேர் கைது

மார்த்தாண்டம், ஏப். 25

புதுக்கடை சப் இன்ஸ்பெக்டர் கார்த்திக் நேற்று முன்தினம் மதியம் காப்புக்காடு பகுதியில் உள்ள புனித அந்தோணியார் உயர்நிலைப் பள்ளி வாக்குசாவடி அருகே ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தார். அப்போது அதே பகுதியை சேர்ந்த களப்பாறை என்ற இடத்தை சேர்ந்த ரமேஷ் (44), மாடன் கண்ணுவி ளை பகுதியை சேர்ந்த செந்தில் குமார் (36) ஆகியோர் வாக்காளர்களுக்கு இடையூறு செய்து பொதுத் தொல்லை செய்ததாக தெரிய வருகிறது.

உடனடியாக அவர்களை அங்கிருந்து கலைந்து செல்லுமாறு போலீசார்கூறினர். ஆனாலும் அவர்கள் அங்கிருந்து கலைந்து செல்லவில்லை. இதை எடுத்து சப் இன்ஸ்பெக்டர் கார்த்திக் புகாரின் பேரில் ரமேஷ், செந்தில் குமார் மீது புதுக்கடை போலீசார் வழக்குப்பதிவு போலீசார் வழக்கு பதிவு செய்தனர்.

## திருச்சி

# பத்திரிக்கையாளர்களை ஒருமையில் பேசிய பெண் அதிகாரி



திருச்சி, ஏப். 25

திருச்சி கிழக்கு, மேற்கு, திருவரம்பூர், ஸ்ரீரங்கம், மணப்பாறைசட்டமன்றத்தொகுதிகளுக்குஉட்பட்ட வாக்குப்பதிவு இயந்திரங்கள் திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் உள்ள ஸ்ட்ராங் ரூமில் சீல் வைக்கப்பட்டன. இந்த நடவடிக்கைகளை வீடியோ எடுக்கச் சென்ற பத்திரிகையாளர்களை, காவல்துறை துணை ஆணையர் சிருஷ்டி சிங் ஒருமையில் 'ஏய்' என அழைத்ததாகக் கூறப்படுகிறது. இதனால் கோபமடைந்த பத்திரிகையாளர்கள் அவருக்கு எதிராக முழக்கங்களை எழுப்பினர். இந்தச் சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

# தருமபுரி மாவட்டத்தில் 90. 14 சதவீத வாக்குப்பதிவு

தருமபுரி ஏப்ரல் 25

தருமபுரி மாவட்டத்தில் பாலக்கோடு, பாப்பிரெட்டிப்பட்டி, பென்னாகரம், தருமபுரி, அரூர் (தனி) ஆகிய ஐந்து சட்டமன்ற தொகுதிகள் உள்ளன. இவற்றில் 6,29,980 ஆண் வாக்காளர்கள், 6,21,887 பெண் வாக்காளர்கள், 152 மூன்றாம் பாலினத்தவர் என மொத்தம் 12,52,019 வாக்காளர்கள் உள்ளனர். தருமபுரி மாவட்டத்தில் உள்ள ஐந்து சட்டமன்ற தொகுதிகளில் மொத்தம் 957 மையங்களில் 1,596 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு காலை 7 மணி முதல் வாக்குப்பதிவு விறுவிறுப்பாக நடைபெற்றது. பல்வேறு பகுதிகளில் மாலை 6:00 மணிக்குள் வாக்குச்சாவடிகளுக்கு வந்த வாக்காளர்களுக்கு டோக்கன்கள் வழங்கப்பட்டு வாக்குப்பதிவு தொடர்ந்து நடைபெற்றது. தருமபுரி மாவட்டத்தில் இரவு 8:00 மணி நிலவரப்படி 90.14 சதவீத வாக்குகள் பதிவாகி இருந்தது.



# திருச்சி கிழக்கு தொகுதியில் கள்ள ஓட்டு?

திருச்சி, ஏப். 25

திருச்சி கிழக்கு தொகுதியில் மதுரம் மேல்நிலைப் பள்ளியில் வாக்குப்பதிவு இயந்திரங்கள் சீல் வைக் கப்பட்ட பிறகு, அவை ஸ்ட்ராங் ரூமிற்கு கொண்டு செல்ல இரவு 1 மணி வரை தாமதம் ஏற்பட்டதாக கூறப்படுகிறது. இதனை அறிந்த த. வெ. க நிர்வாகி கள்சிலர், பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த காவல் துறை அதிகாரியிடம் கள்ள ஓட்டு போடப்படுவதாக கூறி வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். காவல்துறையி னர் விளக்கமளித்த பிறகு இயந்திரங்கள் ஸ்ட்ராங் ரூமிற்கு கொண்டு செல்லப்பட்டன. இதனால், இங்கு கள்ள ஓட்டு போடப்பட்டதா என்ற கேள்வி எழுந்துள்ளது.

# திருச்சியில் கள்ள சந்தையில் மது விற்ற 4 பேர் கைது



திருச்சி, ஏப். 25

திருச்சி அரியமங்கலம் திடீர் நகர் பகுதியில் அரசு அனுமதியின்றி மது பாட்டில்களை விற்பனை செய்த முகமது யாசின், ஆனந்த், ராஜ்குமார், சந்தியாகு ராஜன் ஆகிய நால்வரை போலீசார் கைது செய்தனர். அவர்களிடமிருந்து 130 மது பாட்டில்கள் பறிமுதல் செய்யப்பட்டன. மேல அம்பிகாபுரம், பொன்மலை ப்பட்டி, எடமலைப்பட்டி புதூர் போன்ற பகுதிகளில் இவர்கள் மதுபானங்களை விற்பனை செய்து வந்துள்ளனர்

## திருச்சி

# பேருந்துகள் இயக்கப்படாததால் பொதுமக்கள் போராட்டம்



திருச்சி, ஏப். 25

தமிழகத்தில் சட்டமன்ற தேர்தல் நேற்று நடந்ததை ஒட்டி, சொந்த ஊர்களுக்குச்சென்ற பொதுமக்கள்மீண்டும் பணி செய்யும் இடங்களுக்குத் திரும்பியதால் திருச்சி டிவிஎஸ் டோல்கேட் பேருந்து நிலையத்தில் பேருந்துகள் இன்றி நீண்ட நேரம் காத்திருந்தனர். குறிப்பாக, புதுக்கோட்டைபகுதிக்குபேருந்துகள்இயக்கப்படாததால் பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதையடு த்து, காவல்துறையினர் சம்பவ இடத்திற்கு வந்து பேச்சு வார்த்தை நடத்தி பொதுமக்களை சமாதானப்படுத்தினர்.

## பூதப்பாண்டி அருகே

# நாம் தமிழர் கட்சி ஆதரவாளர்கள் மோதல்; ஒருவருக்கு அரிவாள் வெட்டு

நாகர்கோவில் ஏப்.25

பூதப்பாண்டி அருகே உள்ள கேசவன்புதூர் பகுதியை சேர்ந்தவர் ஜெரால்டு ராஜ் (46) கார் டிரைவர். தற்போது பெங்களூருவில் உள்ளார். இவர் நாம் தமிழர் கட்சி ஆதரவாளர் ஆவார். சட்டமன்றத் தேர்தலில் வாக்களிப்பதற்காக கடந்த 20ஆம் தேதி ஊருக்கு வந்திருந்தார். சம்பவ தினம் கேசவன் புதூர் பஸ் நிறுத்தம் அருகில் உள்ள டீக்கடையில் நின்று நண்பருடன் பேசிக்கொண்டு இருந்தார். அப்போது கேசவன் புதூதரை சேர்ந்த நாம் தமிழர் கட்சி ஆதரவாளரான ஸ்டீபன் (49) என்பவரும்அங்குவந்தார்.அவர்கள்அரசியல்சம்பந்தமாக பேசிக் கொண்டிருந்தபோது ஜெரால்டு ராஜு, ஸ்டீபன் ஆகியோருக்கு இடையே தகராறு ஏற்பட்டது. இந்த தகராறில் ஸ்டீபன் அறிவாளால் ஜெரால்டு ராஜை சரமாரியாக வெட்டினார். இதில் படுகாயம் அடைந்த ஜெரால்டு ராஜ் பூதப்பாண்டி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். புகாரின் பேரில் பூதப்பாண்டி போலீசார் வழக்கு பதிவு செய்து ஸ்டீபனை தேடி வருகிறார்கள்.

## திருவையாறு,தஞ்சாவூர்,ஒரத்தநாடு சட்டமன்றத் தொகுதி

# வாக்குப்பதிவு செய்யப்பட்ட மின்னணு இயந்திரங்கள் குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கலை கல்லூரி வாக்கு எண்ணும் மையம்

### தொகுதி வாரியாக தனித்தனி அறைகளில் பாதுகாப்பாக சீல் வைக்கும் பணிகள்.



தஞ்சாவூர். ஏப்ரல்.25 சட்டமன்ற பொதுத் தேர் தலை முன்னிட்டு குந் தவை நாச்சியார் அரசு மக ளிர் கலை கல்லூரி வாக்கு எண்ணும் மையத்தில் திருவையாறு, சட்டமன்ற தொகுதி,தஞ்சாவூர் சட் டன்ற தொகுதி மற்றும் ஒரத்தநாடு சட்டமன்றத் தொகுதி ஆகிய சட்டமன் றத் தொகுதிகளுக்கான வாக்குப்பதிவு செய்யப் பட்ட மின்னணு இயந்தி ரங்கள் சட்டமன்ற தொகுதி வாரியாக தனித் தனி அறைகளில் பாது காப் பாக வைக்கப்பட்டு சீல் வைக்கும் பணிகள் மாவட்ட தேர்தல் அலுவ லர் மற்றும் மாவட்ட ஆட் சித்தலைவர் பா.பிரியங்கா பங்கஜம் தலைமையில் சட்டமன்ற தேர்தல் பொது பார்வை யாளர் திவேஷ் செஹரா, மாவட்ட காவல் கண்கா ணிப்பாளர் ஏ.சுந்தரவதனம், வேட்பா ளர்களின் முகவர்கள் முன் னிலையில் நடைபெற் றது. மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சித்தலைவருமான பா.

பிரியங்கா பங்கஜம் கூறியதாவது ,தஞ்சாவூர் மாவட்டத்தில் 9,54,204 ஆண் வாக்காளர்கள், 1 0,12,642 பெண் வாக்கா ளர்கள், 156 மூன்றாம் பாலினத்தவர்கள் உட்பட மொத்தம் 19,67,002 வாக் காளர்கள் களுக்கு 2026 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்த லுக்கான வாக்குப்பதிவு தஞ்சாவூர் மாவட்டத்தின் எட்டு சட்டமன்ற தொகு திகளுக்கு ட்பட்ட 2501 வாக்குச்சாவடி நிலையங் களிலும் இந்திய தேர்தல் ஆணையத்தால் தமிழ் நாடு சட்டமன்ற பொதுத் தேர்தலுக்கான வாக்குப்ப திவு 23.04.2026 வியாழக் கிழமை நடைபெற்றது. வாக்குப்பதிவு மற்றும் தேர்தல் பணிகளில் 12004 வாக்குச்சாவடி அலுவலர் கள், 101 தேர்தல் நுண் பார்வையாளர்கள், 210 மண்டல அலுவலர்கள் மற்றும் பாதுகாப்பு பணி யில் 1300 காவல் துறையி னர் மற்றும் மத்திய பாது காப்பு படையினர் பாதுகாப்பு பணியில் ஈடு பட்டனர். தஞ்சாவூர் மாவட்டத்தைப் பொறுத் தவரையில் 15,86,625 வாக்காளர்கள் தங்கள் வாக்கினை செலுத்தியுள் ளனர். இது மொத்த வாக் காளர்களில் 80.63 % ஆக பதிவாகியுள்ளது. திருவிடைமருதூர் சட்ட மன்ற தொகுதியில் 80.78 சதவீத வாக்குகளும், கும் பகோணம் சட்டமன்ற தொகுதியில் 81.04 சதவீத வாக்குகளும், பாபநாசம் சட்டமன்ற தொகுதியில் 80.34 சதவீத வாக்குக ளும், திருவையாறு சட்டமன்ற தொகுதியில் 85.19 சதவீத வாக்குக ளும், தஞ்சாவூர் சட்டமன்ற தொகுதியில் 77.47 சதவீத வாக்குகளும், ஒரத்த நாடு சட்டமன்ற தொகுதி யில் 82.98 சதவீத வாக்கு களும், பட்டுக்கோட் டை சட்டமன்ற தொகுதி யில் 75.42 சதவீத வாக்கு களும், பேராவூரணி சட்டமன்ற தொகுதியில் 81.89 சதவீத வாக்குக ளும் பதிவாகின.

வாக்கு எண்ணிக்கை எதிர்வரும் 04.05.2026 (திங்கட் கிழமை) அன்று நடைபெற உள்ளது. தஞ் சாவூர் மாவட்டத்தினை பொறுத்த வரையில், திருவிடைமருதூர், கும்ப கோணம் மற்றும் பாபநா சம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்கு வாக்கு எண்ணும் மையமாக கும் பகோணம் அரசு கலைக் கல்லூரியும் (தன்னாட்சி), திருவையாறு, தஞ்சாவூர் மற்றும் ஒரத்தநாடு ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக் கான வாக்கு எண்ணும் மையமாக தஞ்சாவூர், குந் தவை நாச்சியார் அரசு கலைக்கல்லூரியும் (தன் னாட்சி) மற்றும் பட்டுக் கோட்டை மற்றும் பேரா வூரணி ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்கு எண்ணும் மைய மாக பட்டுக்கோட்டை அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியும் தேர்வு செய்யப் பட்டு இந்திய தேர்தல் ஆணையத்தால் அங்கீக ரிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட வாக்கு எண்ணும் மையங்களில் 23.04.2026 முதல் வாக்கு எண்ணிக்கை நடைபெ றும் நாளான 04.05.2026 வரையில் 24 மணிநேர மும் காவல் துறையினர் மற்றும் மத்திய ஆயுதப்பி ரிவு பாதுகாப்பு காவல் துறையினரின் மூன்றடுக்கு பாதுகாப்பு அமைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பாதுகாப்பு டன் மின்னணு வாக்குப்ப திவு இயந்திரங்கள் மற் றும் இதர முக்கிய ஆவணங்கள் பாதுகாப் பாக வைக்கப்பட்டுள் ளது. மேலும் அனைத்து வாக்கு எண்ணும் மையங் களிலும் போதுமான கண் காணிப்பு கேமராக்கள் (CCTV) பொருத்தப்பட்டு கட்டுப்பாட்டு அறையில் கண்காணிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இந்த வாக்கு எண்ணும் மையங்களில் தஞ்சாவூர் மாவட்டத்தின் சட்ட மன்ற தொகுதிகளில் போட்டியிடும் வேட்பா ளர்கள் அல்லது அவர்க ளின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் உரிய அடை யாள அட்டையுடன் வாக் குப்பதிவு நிறைவடைந்ததிலிருந்து வாக்கு எண்ணும் நாள் வரை அங்கு அமைக்கப் பட்டுள்ள கண்காணிப்பு மையத்தில் 24 மணிநேர மும் தங்கி பார்வையிட வும் அனுமதிக்கப்பட் டுள்ளது மற்றும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் மேற்கண்ட பணியினை பார்வையிடவும், கண்கா ணிக்கவும் வட்டாட்சியர் நிலையிலான கண்கா ணிப்பு அலுவலர்கள் பணியமர்த்தப்பட்டுள்ள னர் என கூறினார். மாவட்ட வருவாய் அலு வலர் தெ.தியாகராஜன் மற்றும் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 23/ 4/ 2026 அன்று தருமபுரி மாவட்டத்தில் உள்ள ஐந்து சட்டமன்ற தொகுதிகளிலும் வாக்குப்பதிவு செய்யப்பட்ட வாக்குப்பதிவு மின்னணு இயந்திரங்கள் தருமபுரி மாவட்டம் செட்டிகரை அரசு பொறியியல் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணிக்கை மையத்தில் தேர்தல் பொது பார்வையாளர்கள் டாக்டர். ஹீராலால், வந்தனா வைத்யா, மாவட்டதேர்தல்அலுவலர்/மாவட்டஆட்சியர்சதீஷ்ஆகியோர்தலைமையில்அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் மூன்றடுக்கு பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டு முத்திரையிடும் (சீல்) பணி நடைபெற்றது. மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மகேஸ்வரன், மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா , அனைத்து சட்டமன்றத்தேர்தல்நடத்தும்அலுவலர்கள்உள்ளிட்டதொடர்புடையஅரசுஅலுவலர்கள் உடனிருந்தனர்.



## தஞ்சாவூர் அருகே

# மானோஜிப் பட்டி அரசு பள்ளி வாக்குச்சாவடியில் பந்தல் அமைக்காததால் சுட்டெரித்த வெயிலில் அவதிப்பட்ட வாக்காளர்கள்

தஞ்சாவூர் ஏப்ரல் 25 தஞ்சாவூர் அருகே உள்ள மானோஜி பட்டி அரசு பள்ளிவாக்கு சாவ டியில் பந்தல் அமைக்கா ததால் கொளுத் தியவெயிலினால் வாக் காளர்கள் கடும் அவதிக் குள்ளாகினர். குடை பிடித்து எவ்வாறும், துணிகளை முக்காடு போட்டுக் கொண்டும் வாக்காளர்கள் நீண்ட வரிசையில் நின்று வாக்க ளித்தனர்

தஞ்சாவூரு அடுத் துள்ள மானோஜிபட்டி அரசு உயர்நிலைப் பள்ளி உள்ளது .இப்பள்ளியில் மற்றும் 8 வாக்கு சாவடி கள் உள்ளன .இந்த வாக்கு சாவடிகளில் மட் டும் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாக்காளர் கள் வாக்களிக்க ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தன காலையில் 7:00 மணிக்கு வாக்குப் பதிவு தொடங்கியது . வாக்கா ளர் கள் வருகை அதிக ரித்த வண்ணம் இருந் தன. நேரம்ஆக ஆக வாக்காள ர்கள் எண் ணிக்கை அதிகரிக்க தொடங்கியது.இதனால் ஒவ்வொரு வாக்கு சாவ டியிலும் வாக்காளர் கள் கூட்டம் அதிகமாக காணப் பட்டது .ஆண் கள், பெண்கள் என வாக் காளர்கள் நீண்ட வரிசை யில் நின்று வாக்களித்தனர்.

வழக்கமாக வாக்கு சாவடி முன்பு நிழல் குடை இல்லாத வாக்கு சாவடிகளில் சாமியான பந்தல் அமைக்கப்பட்டி ருக்கும் .ஆனால், இந்த முறை இங்குள்ள வாக்கு சாவடிகள் முன்பு சாமி யான பந்தல் எதுவும் அமைக்கப்படவில்லை, இதில் 4 வாக்கு சாவடி கள் முன்பு மரங்கள் இருந்ததால் வாக்காளர் கள் மரத்தின் கீழ் நிழ லில் நின்று வாக்களித் தனர்.

ஆனால் பள்ளியில் மேல்பகுதி யில் உள்ள ஆண்கள், பெண்கள் பொது வாக்கு சாவடிக ளில் நிழற் குடை இல்லை, சாமியான பந் தலும் அமைக்கப்பட வில்லை. இதனால் வாக் காளர்கள் கடும் அவதிக்குள்ளனர். நேரம் ஆக ஆக வெயிலும் கொழுத்தியதால் வாக் காளர்கள் கடும் அவதிக் குள்ளாகினர்பல வாக்கா ளர்கள் குடை பிடித்துக் கொண்டும், சிலர் தாங் கள்வைத்திருந்ததுண்டு, கைகுட்டை ,சேலை சுடி தார் ,துப்பட்டா போன்ற வற்றை முக்காடு போட் டுக் கொண்டு நின்று வாக்களித்தனர்

வயதான வாக்காளர்கள் வந்து வரிசையில் நின்று விட்டு அவர்க ளால் மேற்கொண்டு நிற்க முடியாத தால் அருகில் இருந்தவர்களிடம் சொல்லிவிட்டு மரத்தின் நிழலில்சென்றுஅமர்ந்து கொண்டனர் பின்னர் அவர்கள் வாக்களிக்க நேரம் அந்த பின்னர் எழுந்து சென்று வாக்கு அளித்தனர் இதனால் அந்த பகுதியில் பரப ரப்பு காணப்பட்டது.




திருப்பத்தூர்மாவட்டஆட்சியர்அலுவலகத்தில்,தமிழ்நாடுசட்டமன்றபொதுத்தேர்தல் 2026 ஐ முன்னிட்டு, இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி, திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள 4 சட்டமன்றத்தொகுதிகளில் பயன்படுத்தப்பட்ட மற்றும் Reserve சின்னம் பொருத்தும் கருவிகள் (Symbol Loading Unit) வைக்கப்பட்டுள்ள அறையை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சியர் க.சிவசௌந்திரவல்லி, அவர்கள் அங்கீகரிக்கப்பட்ட கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு, மூடி சீல் வைக்கப்பட்டது. உடன் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) ஜெய்சங்கர், தேர்தல் வட்டாட்சியர் திருமலை, உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

## கொங்கு வேளாளர் கல்வி நிறுவன அறக்கட்டளை சார்பில்

# மாணவர்களுக்கு ரூ. 5 கோடி கல்வி ஊக்கத்தொகை



ஈரோடு ஏப் 25

கொங்கு வேளாளர் இன்ஸ்ட்டிடியூட் ஆப் டெக்னாலஜிடிரஸ்ட் சார்பில் கல்வி யில் சிறந்து விளங்கும் மாணவர்களுக்கு ஆண்டு தோறும் கல்வி ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இந்த அறக்கட்டளை சார்பில் கொங்கு பாலிடெக்னிக்கல்லூரி, கொங்கு பொறியி யல்கல்லூரி, கொங்கு கலை அறிவியல் கல் லூரி, கொங்கு தொழில் பயிற்சி நிறுவனம், கொங்கு நேஷனல் மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப்பள்ளி, கொங்கு இயற்கை மருத்துவம் மற்றும் யோகா மருத்துவக்கல் லூரி ஆகிய கல்வி நிறுவனங்கள் நடத்தப் பட்டு வருகின்றன. இந்நிறுவனங்களில் பயிலும் மாணவர்களுக்கு கல்வி ஊக்கத் தொகையும் ,அரசுப்பள்ளிகளில் பயின்று கல்லூரியில் சேரும் மாணவர்கள் மற்றும் விளையாட்டில் சிறந்து விளங்கி கல்லூரி யில் சேரும் மாண வர்களுக்கு முழு கட் டண சலுகையும் வழங்கப்பட்டு வருகி றது. இதேபோல் இந்த ஆண்டு கல்வி ஊக்கத்தொகை வழங்கும் நிகழ்ச்சி பெருந் துறையில் கல்லூரி கலையரங்கில் நடந் தது.

இதில் சென்னை வருமானவரித்துறை ஆணையர் (வரிவிலக்கு) பிரேமானந்த் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு 1504 மாணவர்களுக்கு ரூ.5.7கோடி மதிப்பி லான பரிசுத் தொகையை வழங்கி பேசினார். அறக்கட்டளையின் தலைவர் தேவராஜன், செயலாளர் சத்திய மூர்த்தி, பொருளாளர் கார்த்திகேயன் மற்றும் அனைத்து கல்வி நிறுவனங்களின் தாளா ளர்கள், அறக்கட்டளையின் பாரம்பரிய உறுப்பினர்கள், அனைத்து கல்வி நிறுவ னங்களின் முதல்வர்கள் உள்பட பலர் இதில் கலந்து கொண்டனர்

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.